அடையாள இலக்கம்

B ☐☐☐☐☐☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2018

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அ). பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.** (10 புள்ளிகள்)

1. மூ ______ கு
2. கங் ______ ரு
3. திருக்கு ______ ள்
4. சி ______ ந்தி
5. புத் ______ கம்
6. ஞாயிற்றுக்கி ______ மை
7. இ ______ ங்கை
8. அன்னாசிப்ப ______ ம்
9. பா ______ மரக்கப்பல்
10. தைப் ______ ங்கல்

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களிலிற்கு ஒத்த சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.** (5 புள்ளிகள்)

1. அன்னை - (மாதா, பிதா, அத்தை)
2. அரசன் - (அமைச்சர், ஆசிரியர், மன்னன்)
3. வீடு - (காடு, இல்லம், கட்டடம்)
4. பாடசாலை - (பள்ளிக்கூடம், கோயில், மடம்)
5. பூ - (மாலை, மலர், பழம்)

**(இ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.** (10 புள்ளிகள்)

1. கல் - ______________________________
2. மலர் - ______________________________
3. பசு - ______________________________
4. புத்தகம் - ______________________________
5. அது - ______________________________

**(ஈ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து வசனத்தைப் பூர்த்தி செய்க.**

**குறிப்பு** : சரியான விடையினைக் கோடிட்ட இடத்தில் எழுதாதவர்களுக்குப் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**

1. தீபன் ____________________ கோவிலுக்குச் சென்றான்.

அ) அப்பாவுடன் ஆ) அப்பாவுக்கு

இ) அப்பாவை ஈ) அப்பாவிடமிருந்து

2. எனது ____________________ பெயர் ஆனந்தன்.

அ) நண்பனின் ஆ) நண்பனுக்கு

இ) நண்பனிடம் ஈ) நண்பனைப்போல்

3. வெளவால் ____________________ தொங்குகிறது.

அ) மரம் ஆ) மரத்திற்கு

இ) மரத்திலிருந்து ஈ) மரத்திலே

4. நோய் வராமல் நாம் ____________________ பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

அ) உடலிற்கு ஆ) உடலைப்

இ) உடலினது ஈ) உடலிடம்

5. நாங்கள் ____________________ பயணம் செய்வது இதுவே முதல் முறையாகும்.

அ) விமானத்தை ஆ) விமானத்திலே

இ) விமானத்தினது ஈ) விமானத்துடன்

(10 புள்ளிகள்)

**(உ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. பலநாடுகளைச் சுற்றிப்பார்க்க எனக்கு **ஆவலாய்** இருக்கிறது.

   அ) ஆர்வமாய் ஆ) சந்தோசமாய்

   இ) விருப்பமாய் ஈ) மகிழ்ச்சியாய்

2. தினமும் உடற்பயிற்சி செய்வதால் பல **பிணிகள்** குணமாகும்

   அ) இன்னல்கள் ஆ) வலிகள்

   இ) கவலைகள் ஈ) நோய்கள்

3. பெற்றோர்கள் **களிப்படையும்** வகையில் பிள்ளைகள் என்றும் நடந்து கொள்ள வேண்டும்.

   அ) மகிழ்ச்சியடையும் ஆ) நேசிக்கும்

   இ) விரும்பும் ஈ) பாராட்டும்

4. நீங்கள் தினந்தோறும் பால் **அருந்த** வேண்டும்.

   அ) குடிக்க ஆ) கறக்க

   இ) வாங்க ஈ) தர

5. சிறுவர்கள் **விலங்குகளைப்** பற்றிய கதைகளை விரும்பிப் படிப்பர்

   அ) மீன்களைப் ஆ) பறவைகளைப்

   இ) மிருகங்களைப் ஈ) உயிரினங்களைப்

(10 புள்ளிகள்)

**(ஊ) முதல் வாக்கியத்தில் கொடுக்கப்பட்டுள்ள கோடிட்ட வினைச்சொல்லை அதன் கீழுள்ள வாக்கியத்தின் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி தரப்பட்ட இடைவெளிக்குள் எழுதுக.**

1. நேற்றுப் பருந்துகள் உயரப் **பறந்தன.**

   இப்பொழுது பறவைகள் உயரப் ________________________.

2. சென்றவருடம் நான் பத்தாம் வகுப்பிலே **படித்தேன்.**

   அடுத்தவருடம் என் தங்கை பத்தாம் வகுப்பிலே ________________.

3. நீங்கள் மிகவும் திறமையாகப் **பேசுகிறீர்கள்.**

   நேற்று என் அண்ணண் மேடையில் ஏறித் திறமையாகப்

   ______________________.

4. இப்பொழுது நண்பர்கள் கடற்கரையிற் கூடி **விளையாடுகிறார்கள்.**

   நாளை பாடசாலை மாணவர்கள் மைதானத்திலே கூடி

   ___________________.

5. சென்ற வருடம் கணிதப் பாடத்தில் எனது நண்பன் அதிக புள்ளிகள் **பெற்றான்.**

   அடுத்த வருடம் நானும் கணிதப் பாடத்தில் அதிக புள்ளிகள்

   _____________________.

(15 புள்ளிகள்)

(எ) கீழேயுள்ள படத்தொடரைக் கவனமாகப் பார்த்து, அதன் கருத்தை விளங்கியபின் தரப்பட்ட ஐந்து (5) சொற்களைப் பாவித்து பொருத்தமான வசனங்களை எழுதுக.

குறிப்பு: மிகக் குறைந்தது 7 சொற்கள் கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.




1. செய்தித்தாள் :

________________________________________

________________________________________

________________________________________

**2.** சிறுவன் :

______________________________________________

______________________________________________

______________________________________________

**3.** குப்பைத்தொட்டி :

______________________________________________

______________________________________________

______________________________________________

**4.** புகைபிடித்தல் :

______________________________________________

______________________________________________

______________________________________________

**5.** பொதிகள் :

______________________________________________

______________________________________________

______________________________________________

(20 புள்ளிகள்)

**(ஏ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையைப் பூர்த்தி செய்க.**

| | | |
|---|---|---|
| வளர்க்க | சந்திரனுடைய | அழைத்துக் |
| நாயைத் | தவறினை | இருக்கையில் |
| தடியால் | வளர்த்து | தனியாக |
| விளையாடச் | கண்டதைக் | இரக்கம் |

ஓருநாள் சந்திரனும் அவனது தந்தையும் அவர்களுடைய வீட்டின் அருகில் இருந்த பூங்காவுக்குச் சென்றார்கள். அங்கே சிறிது நேரம் உலாவினார்கள். பின்பு ____________________ தந்தை சிறிது நேரம் ஓய்வெடுக்க விரும்பியபடியால் அங்கிருந்த ஒரு ____________________ அமர்ந்தார். அவர் அருகே சந்திரன் ____________________ விளையாடிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தின் பின்னர், சிறுவர்கள் சிலர் ஒரு குட்டி நாயைத் ____________________ அடிப்பதைக் கண்டான். அவன் உடனே தன்னுடைய தந்தையிடம் ஓடிச்சென்று தான் ____________________ கூறினான். சந்திரனின் தந்தை உடனே எழுந்து சென்று அந்தச் சிறுவர்களிடம் ''மிருகங்களைத் துன்புறுத்தல் மிகவும் பாவம்'' என்று அன்புடன் அறிவுரை கூறினார். அதைக்கேட்ட சிறுவர்கள் தங்களின் ____________________ உணர்ந்தனர். பின்பு அவர்கள் ____________________ சென்றுவிட்டார்கள். அந்த நாய்க்குட்டியின் மீது ____________________ கொண்ட சந்திரன் அதைத் தான் வளர்க்க விரும்புவதாகத் தன் தந்தையிடம் கூறினான். சந்திரனின் தந்தையும் அதற்குச் சம்மதித்தார். சந்திரன் அந்த நாய்க்குட்டியை ____________________ கொண்டு தந்தையோடு வீடு திரும்பினான். சந்திரன் அந்த நாய்க்குட்டிக்கு 'ஜிம்மி' எனப் பெயரிட்டு அதை அன்புடன் ____________________ வந்தான்.

(20 புள்ளிகள்)